**ரிசர்வ் வங்கி - ஒருங்கிணைந்த ஆம்பட்ஸ்மேன் திட்டம், 2021**
**முக்கிய அம்சங்கள்**

**பொருத்தம்:**


திட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வங்கி வழங்கும் சேவை அல்லது வங்கி-இல்லாத நிதி நிறுவனம் அல்லது திட்டத்தில் பங்கெடுப்பவர்கள் (செலுத்தல் அமைப்பில் பங்கெடுக்கும் நபர்), அல்லது அவ்வப்போது திட்டத்தில் இருந்து விலக்கி வைக்கப்படாத வரை, ரிசர்வ் வங்கி குறிப்பிடும் பிற உறுப்பு எதுவும் வழங்கும் சேவைக்கு இந்தத் திட்டம் பொருந்தும்.

| புகாரளிக்க வாடிக்கையாளருக்கு இருக்கும் காரணங்கள்:- | இந்தத் திட்டத்தின் கீழ் புகாரைப் பராமரிக்காமல் இருக்க/ சேவையில் குறைபாடு இல்லாத புகார்களுக்குக் காரணம் தொடர்பானவை:- |
|---|---|

| | |
|---|---|
| லென்டிங்கார்ட் ஃபைனான்ஸ் லிமிடட் ("நிறுவனம்") இன் செயலால் அல்லது விடுபடலால் ஏற்படக்கூடிய சேவைக் குறைபாட்டால் வருத்தப்படும் வாடிக்கையாளர் இந்தத் திட்டத்தின் கீழ் நேரில் அல்லது திட்டத்தில் வரையறை செய்தபடி அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மூலம் புகார் அளிக்கலாம். | • நிறுவனத்தின் வியாபார நியாயம்/வியாபார முடிவின் படி;<br>• வெளிப்புற ஒப்பந்தம் தொடர்பாக வெண்டருக்கும் நிறுவனத்துக்கும் ஏற்படும் சச்சரவு;<br>• ஆம்பட்ஸ்மேனிடம் நேரடியாக புகாரளிக்கப்படாத குறை;<br>• நிறுவனத்தின் மேலாண்மை அல்லது அதிகாரிகளுக்கு எதிரான பொதுக் குறைகள்;<br>• நிலையான அல்லது சட்டம் அமல்படுத்தும் ஆணையத்தின் ஆர்டருக்கு இணங்கும் வகையில் நிறுவனம் கையெடுத்த செயலில் ஏற்படும் சச்சரவு;<br>• ரிசர்வ் வங்கியின் ஒழுங்கு படுத்தும் அதிகாரத்திற்குள் வராத சேவை;<br>• நிறுவனத்திற்கும் பிற ஒழுங்கு ஆணையங்களுக்கும் இடையிலான சச்சரவு;<br>• நிறுவனத்தின் பணியாளர்-பணிஅமர்த்துபவர் தொடர்பான சச்சரவு;<br>• ஏற்கனவே கீழ்க்காணும் இதே காரணங்களுக்காக செய்யப்படாத புகார்:-<br>- அதே புகார்தாரியிடம் பெறப்பட்டாலும் அல்லது பிற ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட புகார்தாரிகளிடம் இருந்து அல்லது ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட தரப்பினரிடம் இருந்து ஆம்பட்ஸ்மேன் ஒருவரால் பெறப்பட்டு ஆம்பட்ஸ்மேன் முன்பாக நிலுவையில் இருப்பது அல்லது விசாரித்து செட்டில் செய்யப்பட்டுவிட்டது; மற்றும்<br>- நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது நியமன நீதிபதி அல்லது வேறு எந்த ஆணையத்திலும் நிலுவையில் உள்ளது; அல்லது அதே புகாரளிப்பவரிடம் பெறப்பட்டாலும் அல்லது பிற ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட புகாரளிப்பவர்களிடம்/தரப்பினரிடம் இருந்து பெறப்பட்டாலும் விசாரணை அடிப்படையில், நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது நியமன நீதிபதி அல்லது வேறு எந்த ஆணையத்தாலும் செட்டில் செய்யப்பட்டது.<br>• புகாரானது மோசடியானது அல்லது மேலோட்டமானது அல்லது அலைக்கழிக்கும் இயல்பு கொண்டது.<br>• இத்தகைய கோரிக்கைகளுக்காக லிமிடேசன் சட்டம் 1963 யில் கொடுத்துள்ள காலக்கெடு |

| | |
|---|---|
| | காலாவதியான பிறகு நிறுவனத்திடம் அளிக்கப்படும் புகார்;<br>• திட்டத்தின் சரத்து 11 -இல் குறிப்பிட்ட முழுத் தகவலைப் புகாரளிப்பவர் வழங்கவில்லை;<br>• புகார்தாரி நேரில் அல்லது வக்கீல் (புகார்தாரி வக்கீலாக இல்லாத பட்சத்தில் )அல்லாத அங்கீகரித்த ஒரு பிரதிநிதி மூலம் அளிக்கப்படாத புகார். |

**வாடிக்கையாளர் புகார்**
**தருவது எப்படி?**




**ஆம்பட்ஸ்மேன்/புகார் பெறும் மற்றும் செயலாக்க மையத்தில் புகார் தாக்கல் செய்வதற்கான செயல்முறை:-**

1. **இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஆன்லைன் புகார் நிலையத்தில் (https://cms.rbi.org.in) புகார் தாக்கல் செய்யலாம்.**

2. கீழ்க்காணும் முகவரியில் உள்ள புகார் மற்றும் செயலாக்க மையத்தில் கையெழுத்து விண்ணப்பமாகவும் புகாரைச் சமர்ப்பிக்கலாம். கையெழுத்து விண்ணப்பம் என்றால் புகார்தாரி அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முறையாகக் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

3. கையெழுத்து விண்ணப்பம் இந்திய ரிசர்வ் வங்கி குறிப்பிட்டபடி தகவல் உள்ளடக்கிய புகார்ப் படிவ (தனியாகப் பதிவேற்றப்பட்டுள்ளது) வடிவில் இருக்க வேண்டும்.

| **புகார் பெறும் மற்றும் செயலாக்க மையத்தில் (சி.ஆர்.பி.சி) விபரம்**<br><br>புகார் பெறும் மற்றும் செயலாக்க மையம் சி.ஆர்.பி.சி)<br>இந்திய ரிசர்வ் வங்கி, சென்ட்ரல் விஸ்டா 4வது தளம், செக்டார் 17,<br>சண்டிகர்-160017, இலவச எண்- 14448 |
|---|

1. **ஒரு ஆம்பட்ஸ்மேன் முடிவு எடுப்பது எங்ஙனம்?**
   - ஆம்பட்ஸ்மென் முன்னிலையில் நிகழுபவை சுருக்கமான இயல்பு கொண்டவை
   -சமரசம் மூலமாக செட்டில்மெண்ட் செய்யப்படும் இயல்பு கொண்டவை-> எட்டப்படவில்லை என்றால், ஈடு/ஆர்டர் வழங்க முடியும்.

2. **ஆம்பட்ஸ்மேன் முடிவில் மனநிறைவு இல்லை என்றால் வாடிக்கையாளர் தீர்ப்பாயத்தில் முறையிட முடியுமா?**
ஆம், ஆம்பட்ஸ்மேன் முடிவுகள் மேல்முறையீடு செய்ய முடியும் > தீர்ப்பாயம்: ரிசர்வ் வங்கியின் துறையில் பொறுப்பில் உள்ள செயல் இயக்குநர் > ஈடு கிடைத்த அல்லது புகார் நிராகரிக்கப்பட்டதில் இருந்து 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்தாக வேண்டும்.

**குறிப்பு:**

- இது ஒரு சச்சரவு தீர்க்கும் மாற்று வழி

- எந்த நிலையிலும் இதற்காக வேறு நீதிமன்றம்/மன்றம்/ஆணையம் எதையும் அணுகும் சுதந்திரம் வாடிக்கையாளருக்கு உண்டு.

மேற்கொண்டு திட்ட விபரங்களுக்கு காண்க:

https://cms.rbi.org.in/cms/indexpage.html#eng

**லெண்டிங்கார்ட் ∴பைனான்ஸ் லிமிடடின் முதன்மை நோடல் அலுவலர்**

**பெயர்**: திரு. அஜிதா கே

**முகவரி**: 401, 4வது தளம், ஐகானிக் சியாமள், சியாமள் கிராஸ்ரோடு அருகில்,

அகமதாபாத் - 380015

**போன்**: 079 6814 4659 **மொபைல் எண்:** +91-70690 87586
**மின்னஞ்சல்:** nodalofficer@lendingkart.com

திங்கள்-வெள்ளி (பொது விடுமுறை தவிர்த்து) நாட்களில் காலை 10:30 - மாலை 6:00 வரை முதன்மை நோடல் அலுவலரைத் தொடர்புகொள்ளலாம்